பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.48 நாள்: 06.04.2018

**<u>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பரப்புரையாளர்களுக்கான பயிற்சி முகாம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல்வேறு விதமான விழிப்புணர்வு முகாம்கள் பொதுமக்களிடையே தொடர்ந்து நடத்தப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு தூய்மை சம்பந்தமான பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த முறையில் மண்டலத்திற்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் 15 மண்டலத்திற்கு 15 மேற்பார்வையாளர்களும் மற்றும் ஒரு கோட்டத்திற்கு ஒரு பரப்புரையாளர் வீதம் மொத்தமுள்ள 200 கோட்டங்களுக்கும் 200 பரப்புரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பரப்புரையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் குப்பைகளை வகைப்பிரித்து அளிப்பது குறித்து விவரங்கள் சேகரித்தல், தனிநபர் கழிப்பிட வசதியுள்ள வீடுகளின் எண்ணிக்கையினை கண்டறிதல், தனிநபர் கழிப்பிடங்கள் இல்லாத வீடுகள் மற்றும் அதற்கான காரணங்களை கண்டறிந்து தெரிவித்தல், வீடுகளில் தனிநபர் கழிப்பிட வசதி இருந்தும் செப்டிக்டேங்க் வசதி அல்லது பாதாள சாக்கடை இணைப்பு வசதி இல்லாவிடில் கழிவினை நேரடியாக கால்வாயில் விடும் சுகாதாரமற்ற கழிப்பிடங்கள் உள்ள வீடுகளின் எண்ணிக்கையை கண்டறிந்து தெரிவித்தல், மக்களுக்கு குப்பையை பிரித்தளிப்பதன் அவசியம் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற தூய்மை சம்பந்தமான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். இவர்களது பணியினை 15 மேற்பார்வையாளர்களும் தினமும் பார்வையிட்டு, தூய்மையான சென்னையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ரிவார்டு சொசைட்டி தொண்டு நிறுவனம் இணைந்து 26.03.2018, 27.03.2018 மற்றும் 04.04.2018 ஆகிய தேதிகளில் ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகை கட்டிடத்தில் மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களுக்கு பயிற்சி அளிக்கபட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) திரு.மகேசன் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.மகரபூசனம் இ.ஆ.ப, (ஓய்வு) ஆகியோர் தலைமை ஏற்று இப்பயிற்சியினை துவக்கி வைத்தனர்.

இப்பயிற்சியின் போது மேற்பார்வையாளர் மற்றும் பரப்புரையாளர்களுக்கு அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து PPT மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், அவர்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் மற்றும் அவை குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) திரு.சக்திமணிகண்டன், செயற்பொறியாளர் (தி.க.மே) திருமதி விஜுலா, சுகாதார கல்வி அலுவலர் முனைவர் திரு.சீனிவாசன், சிறப்பு பயிற்சியாளர் திரு.நித்தியானந்தன் மற்றும் தேசிய வாழ்வாதார இயக்க ஆலோசகர் திரு. ராஜன்பாபு ஆகியோர் பங்கேற்று பயிற்சி அளித்தனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.**